20th March 1959]

SRI M. K SOMASUNDARAM : இந்தச் சிறு கைத்தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களைச் சர்க்கார் வாங்கி விற்க முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்கார் வாங்கி விற்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. தனி மார்க்கெட்டுகளில் விற்கப்படலாம். கூட்டுறவுச் சங்கங்களும் இந்த விற்பனையை எடுத்துக் கொள்ளலாம்.

Adult Education Schools in Markanam National Extension Service Block

* 901 Q.—SRI A. A. RASHEED (on behalf of Sri M. Jagannathan) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the number of Social (Adult) Education Schools opened so far in the Markanam National Extension Service Block in the South Arcot district; and

(b) the amount spent for that purpose?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) None.

(b) Does not arise.

SRI A. VEDARATHNAM : இந்த முதியோர் கல்விக்காகச் செலவிடப்படுகிற பணம் அதற்குத் தகுந்த அளவு பயன்படுகிறது என்று சர்க்கார் கருதுகிறதா ? அப்படி இல்லையென்றால் அந்தத் திட்டத்தை மாற்றியமைக்கவோ, திருத்தியமைக்கவோ அரசாங்கம் உடனடியாக முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது மாற்றியமைக்கப்பட்ட திட்டம் அமுலில் இருக்கிறது என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். இப்பொழுது இந்த அபிவிருத்தி வட்டாரங்களில் 16 வயது, 18 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இந்தக் கல்வி அளிக்கவேண்டுமென்பது திட்டம். இது நல்ல முறையில் நடந்து வருகிறது என்று அறிக்கையில் இருந்து தெரியவருகிறது.

SRI M. K SOMASUNDARAM : சார், இங்கு கல்வி கற்றுக் கொடுக்க பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கிற ஆசிரியர்களைக் கொண்டு வந்து கற்றுக்கொடுக்கிறார்களா ? அல்லது தனியாக ஆசிரியர்களை நியமிக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இரண்டு முறையும் கையாளப்படுகிறது.

MR SPEAKER : கேள்வி 902-ஐ எலெக்ட்ரிசிடி மினிஸ்டர் வந்த பிற்பாடு எடுத்துக்கொள்ளலாம்.

Veterinary aid in Thiruthuraipoondi taluk

* 903 Q.—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, திருத்துறைப்பூண்டி தாலுகா பிளாக் டெவலப்மெண்ட் இலாகாவிலிருந்து கால்நடைப் பராமரிப்பை எல்லாம் கால்நடை இலாகாவிற்கு மாற்றப்பட்டதா ?

(ஆ) எப்போது, எதற்காக ?

[20th March 1959

(இ) இந்தப் பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளமும், கால்நடைகளுக்குப் பராமரிப்புச் செலவும் கொடுக்கப்பட்டு வருகிறதா ?

(ஈ) இல்லையானல் எப்போதிலிருந்து ? தாமதத்திற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir. The administrative control of the following institutions started by the Community Development administration in Tiruthuraipoondi taluk of Tanjore district was transferred to the Animal Husbandry Department :

(1) Minor Veterinary Dispensary, Talanayar.

(2) Village Livestock Improvement Centre-*cum*-First Aid Centre, Alathambadi.

(3) Minor Veterinary Dispensary, Vedaranyam.

(4) First Aid Centre, Ayakarambalam.

(*b*) The administrative control was transferred to the Animal Husbandry Department on 1st July 1958, as the Community Development Block had completed the prescribed period of operation of three years and was ordered to be worked later on the National Extension Service pattern.

(*c*) & (*d*) The salaries of the staff engaged in the work and the maintenance expenditure for the cattle have been paid in the month of January 1959, after obtaining Government sanction, on receipt of authorisation from the Accountant-General.

SRI A. VEDARATHNAM : இந்தக் குறிப்பிட்ட இடங்களில் உள்ள கால்நடைகளுக்கு எத்தனை மாத காலமாக தீனிச் செலவு இல்லாமலும், அங்கு வேலை பார்க்கும் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் இல்லாமலும் இருந்தது ? அம்மாதிரி ஏற்படக் காரணம் என்ன ? அதற்குப் பொறுப்பாளி யார் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த விவரங்கள் என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் இதைப்பற்றிய விவரங்கள் கொடுத்தால் மேற்கொண்டு இதைப்பற்றிக் கவனம் செலுத்துகிறேன். முன்பு கூறியதுபோல் இந்தப் பணத்தைச் செலவு செய்ய சாங்ஷன் தேவையாக இருந்தது. ஒரு வருஷத்தில் இருந்து மற்றொரு வருஷத்திற்கு மாற்றவேண்டி இருந்தது. அக்கவுண்டண்ட் ஜெனாலின் " ஆதரைசேஷனும் " அத்தியாவசியமாக இருந்தது.

SRI M. K. SOMASUNDARAM : இவ்வாறு சம்பளம் கொடுக்காமலும், தீனிச் செலவு கொடுக்காமலும் இருந்ததால் வேலை நடைபெறவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்கு யார் பொறுப்பு என்று கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: இதற்கு நான் பதில் அளித்திருக்கிறேன். ஆனல் அந்த பிராந்தியத்தைச் சேர்ந்த கனம் அங்கத்தினர்கள் உடனடியாக அதைப்பற்றி என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தால் இன்னும் துரிதமாக நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கலாம்.